# ஏழை மாணவன்

பலஸ்தீன் நாட்டில் முஹம்மத் என்று ஒரு சிறுவன் இருந்தான். இளமைப் பருவத்திலேயே அவன் தந்தையை இழந்தான். வறுமையில் வாடிய தாயார் கஷ்டத்துடன் அவனை வளர்த்து வந்தார். தினமும் மகனைப் பக்கத்தில் இருத்திக் கொண்டு குர்ஆனை ஓதுவார். தாயார் ஓதுவதைக் கேட்டே அவன் அல்குர்ஆனை மனனஞ் செய்து கொண்டான்.

மக்காவில் முஹம்மதின் மாமனார் வாழ்ந்து வந்தார். முஹம்மதின் திறமையைக் கண்ட தாயார் அவனைப் படிக்க வைப்பதற்காக மக்காவிற்கு அனுப்பி வைத்தார். அவரும் ஓர் ஏழை. எனவே மக்காவில் முஹம்மதைப் படிக்க வைக்க மாமாவினால் முடியவில்லை.

எனினும், கற்பதில் ஆர்வம் கொண்ட முஹம்மத் தினமும் பள்ளிக்குப் பக்கத்தில் போய் நிற்பான். அங்கு ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதை அவதானமாகக் கேட்டுக் கொண்டிருப்பான். கற்றுக் கொடுப்பவற்றை முஹம்மத் மனதில் பதித்துக் கொள்வான். வகுப்பு முடிந்து வெளியேறும் மாணவர்களுடன் அன்றைய பாடங்களைப் பற்றி முஹம்மத் உரையாடுவான். அப்போது அவரின் திறமையை மாணவர்கள் அறிந்து கொண்டார்கள். எனவே, தமக்கு விளங்காதவற்றை

முஹம்மதிடம் கேட்பதை வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

சில வாரங்கள் கழிந்தன. முஹம்மதின் திறமையும் வறுமையும் ஆசிரியருக்குத் தெரிய வந்தன. கட்டணம் பெறாமலேயே முஹம்மதை வகுப்பில் சேர்த்துக் கொள்ள முன்வந்தார். எனினும், மற்றவர்கள் கட்டணம் செலுத்தும் போதுதான் மாத்திரம் கட்டணம் செலுத்தாமல் படிப்பது நியாயமற்றது என முஹம்மத் எண்ணினார். எனவே, வகுப்பு முடிந்ததும் காட்டுக்குச் செல்வார். விறகுவெட்டி வந்து ஆசிரியர் வீட்டுக்குக் கொடுத்து வந்தார்.

பாடம் நடக்கும்போது எல்லா மாணவர்களும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதிக் கொள்வார்கள். ஆனால், முஹம்மதுக்கோ எழுதுவதற்குப் பேனாவுமில்லை. தாளும் இல்லை. மற்றவர்கள் எழுதும்போது தானும் எழுத வேண்டும் என்று ஆசைப்படுவார். இருந்தும் என்ன செய்வது? ஆசிரியர் கற்பிப்பதை மனதில் பதித்துக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. ஆயினும், ஏனைய மாணவர்களிலும் திறமைமிக்கவராக அச்சிறுவர் விளங்கினார்.

இவ்வாறு வறுமையில் வாழ்ந்தபோதும் விடாமுயற்சியுடன் கற்று வந்தார். பின்னர் ஈரான், பக்தாத் போன்ற



நகரங்களில் வாழ்ந்த அறிஞர்களைத் தேடிச் சென்று கற்றுத் தேர்ந்தார். இருபது வருடங்களின் பின்னர் மீண்டும் மக்கா வந்து சேர்ந்தார். இவரே பிற்காலத்தில் இமாம் ஷாபிஈ (ரஹ்) என்று பிரசித்தமடைந்தார். அவர் ஒரு கவிஞர்; மருத்துவர்; சட்டக்கலை அறிஞர்; பல சிறந்த நூல்களின் ஆசிரியரும் ஆவார்.

ஆகவே, நாமும் அவரைப் போன்று விடாமுயற்சியுடன் படித்து மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக வாழ முயல்வோமாக.

**முயற்சி வெற்றியைத் தரும்.**
**வறுமை கல்விக்கு தடையல்ல.**

## பயிற்சி

**சுருக்கமாக விடை எழுதுங்கள்.**

1. இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்கள் எங்கே பிறந்தார்?
2. அவர் எவ்வாறு அல்குர்ஆனை மனனம் செய்தார்?
3. அவர் கற்பதற்காக எங்கெங்கு சென்றார்?
4. அவர் ஆசிரியருக்குக் கட்டணம் செலுத்துவதற்குப் பதிலாக என்ன செய்தார்?
5. அவரிடம் காணப்பட்ட நல்ல பண்பு ஒன்றைக் குறிப்பிடுங்கள்.